**செய்தி வெளியீடு எண்: 426** **நாள் : 06.08.2013**

பள்ளிக் கல்வித் துறை

பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் **06.08.2013** அன்று சென்னை காஞ்சிபுரம் மாவட்டங்களில் வேளச்சேரி அரசு மேல்நிலைப் பள்ளி, மேடவாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஜல்லடியன் பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் அரசின் நலத்திட்ட உதவிகள் உரிய நேரத்தில் வழங்கிடப்படுவதைக் குறித்தும் பள்ளியில் கற்றல் கற்பித்தல் நடைமுறை குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலர் திருமதி. த. சபிதா. இ.ஆ.ப., அவர்கள், அனைவருக்கும் கல்வித்திட்ட மாநில இயக்குநர் முனைவர் திரு C.N. மகேஷ்வரன், இ.ஆ.ப., அவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் வி.சி. இராமேஸ்வரமுருகன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ரெ. இளங்கோவன், இணை இயக்குநர்கள் ஆய்வின்போது உடன் இருந்தனர். இந்தியாவிலேயே தமிழ்நாடு கல்வி வழங்குவதில் முதன்மை மாநிலமாகத் திகழ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ரூ. **16,965.30** கோடி பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள் என்ற கருத்தினையும் தெரிவித்தார்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வேளச்சேரி அரசு மேல்நிலைப் பள்ளி வழிப்பாட்டுக் கூட்டத்தில் முழுமையாகப் பங்கேற்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். மாணவர்கள் பாடங்களை படிப்பதுடன் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்

ஆணைக்கிணங்க தமிழகத்திலுள்ள 55,000 பள்ளிகளிலும் சதுரங்கப் போட்டிகள் நடத்திடவும், இதனைத் தொடர்ந்து ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தி மாணவர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளனர். 8, 10, 12 ம் வகுப்புகளில் பாட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடி வகுப்பறை நிகழ்வுகளையும் மாணவர்களின் கற்றல் அடைவினையும் மதிப்பீடு செய்தார்கள். ஆசிரியர்கள் பாடம் நடத்துவதை வகுப்பறையில் அமர்ந்து ஆய்வு மேற்கொண்டார்கள். பள்ளி நூலகத்தில் உள்ள புத்தகங்களை மாணவர்களுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறை வழங்கி வாசிக்கும் பழக்கத்தினை மேம்படுத்த ஆலோசனை வழங்கினார்கள்.

மாணவர்களின் உடற்பயிற்சி வகுப்பினைப் பார்வையிட்டு மாணவர்கள் உடல் நலத்துடன் இருக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்கள். சத்துணவு கூடத்தினைப் பார்வையிட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் முட்டை, சாம்பார் உள்ளிட்ட உணவு பொருட்களை ஆய்வு செய்தார். கணினி ஆய்வகத்தினை மாணவர்கள் பயன்படுத்துவதை நேரில் பார்வையிட்டார்.

மேடவாக்கம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில், செயல்வழிக் கற்றல் வகுப்பினைப் பார்வையிட்டு மாணவர்களிடம் கேள்விகள் கேட்டு உற்சாகப்படுத்தினார். ஒவ்வொரு மாணவரிடமும் எழுத்துக்களைக் கூறச் செய்தும், எழுதச் செய்தும், ஆர்வமூட்டினார். இப்பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் முட்டையின் எடையினை ஆய்வு செய்ததோடு, வழங்கப்படும் சத்துணவினைச் சாப்பிட்டு தரத்தினை ஆய்வு செய்தார். தமிழக அரசு மாணவர்களுக்கு வழங்கும் நலத்திட்டங்களின் விவரங்களை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் பள்ளியின் சுவற்றில் எழுதியிருந்ததை வெகுவாகப் பாராட்டினார்கள். இப்பள்ளி வளாகத்தில் செயல்படும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான பகல் நேர பாதுகாப்பு மையத்தில் பயிலும் 26 மாணவ மாணவிகளும்

அவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு கல்வி தொடர்பான விவரங்களை முழுமையாக ஆய்வு செய்தார்.

ஜல்லடியன்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 7 மற்றும் 8 ம் வகுப்புகளில் படைப்பாற்றல் கல்வி முறையில் நடைபெறும் வகுப்புகளில் தமிழ் மற்றும் சமூகவியல் பாடங்களில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பதிவு செய்துள்ள மனவரைப்படத்தினைப் பார்த்து அதனை ஒட்டிய கேள்விகளைக் கேட்டதுடன் மாணவர்களின் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எளிய சொற்களைத் தானாகக் கூறுவதைக் கேட்டு மகிழ்ந்தார்கள். பல்வேறு பாடங்களில் மாணவர்களின் திறன்களை எளிய கேள்விகள் மூலம் கேட்டு ஆர்வமூட்டினார்கள்.

தாம்பரம் ஜெய்கோபால் கரோடியா தேசிய மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற காஞ்சிபுரம் மாவட்ட உயர்நிலை, மேல்நிலைப் பள்ளித் தலைமையாசியிர்கள் கூட்டத்தில் வலந்து கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள் உரிய நேரத்தில் வழங்கப்படுவதினை ஆய்வு செய்ததுடன் 10 மற்றும் 12 வகுப்பில் தேர்ச்சி சதவீதத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும் ஆலோசனை வழங்கினார்கள். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்கான, தமிழகத்தை இந்தியாவிலேயே தலை சிறந்த கல்வி வழங்கும் மாநிலமாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தினை அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் வலியுறுத்தினார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**